DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

In the court Judicial Magistrate At Oddanchatram

Case No : CC 122/2019

List of Witness : Lw2

Prosecution Witness : PW6

| | | | |
|---|---|---|---|
| பெயர்: | விஜய சந்திரிகா | ஜாதி: | |
| தந்தை / கணவர் பெயர் : | சந்திரசேகரன் | தொழில்: | |
| கிராமம்: | | சமயம்: | |
| தாலுகா: | | வயது | |

Solemnly affirmed in accordance with the provisions of Oaths Act 1969

Examination Date / சாட்சி விசாரணை தேதி :- 20/07/2026

(1வது எதிரி ஆஜர். 2வது எதிரி ஆஜர் இல்லை. 2வது எதிரி தரப்பு வழக்கறிஞர் 2வது எதிரியின் அடையாளம் குறித்து எந்தவொரு ஆட்சேபனையும் இல்லை என்று மேற்குறிப்பு செய்ததன் பேரில் BNSS பிரிவு 355 ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது.)

**அரசு தரப்பில் முதல் விசாரணை :**

நான் தற்போது வத்தலக்குண்டு கிராமத்தில் குடியிருந்து வருகிறேன். நான் தற்போது தேனி மாவட்டம், உதவி திட்ட அலுவலராக (வீடுகள்) பணியாற்றி வருகிறேன். கடந்த 16.03.2019 ஆம் தேதி நீலமலைக்கோட்டை ஊராட்சி, ஜோத்தல் நாயக்கன்குளம், அவுரி மேட்டு ஓடையில் ஆக்கிரமிப்புகளை அகற்றுவதற்காக நானும், ஊராட்சி செயலர் பவுன்ராஜ், பணிதல பொறுப்பாளர் காந்தி, HDFC வங்கி ஒருங்கிணைப்பாளர் குப்புச்சாமி, ஜே.சி.பி. ஆப்ரேட்டர் முனியப்பன் ஆகியோர் காலை 10.30 மணியளவில் சென்றோம். அங்கு ஆக்கிரமிப்புகளை அகற்றக்கூடாது என்று ஆஜர் எதிரி கருப்புச்சாமியும் அவரது மனைவி பரிபூர்ணமும் எங்களை பணி செய்யவிடாமல் தடுத்தும், தகாத வார்த்தைகளால் பேசியும், அரிவாளை வைத்து எங்களை கொலை மிரட்டல் செய்தார்கள். அதன்பிறகு எங்களை மிரட்டி பணி செய்யவிடாமல் தடுத்ததால் நாங்கள் சென்றுவிட்டோம். பின்பு சம்பவம் குறித்து ஊராட்சி செயலர் பவுன்ராஜ் காவல் நிலையம் சென்று புகார் கொடுத்தார். (சாட்சி ஆஜர் எதிரி கருப்புச்சாமியை சுட்டிக்காட்டி அடையாளம் காட்டினார். மற்றொரு எதிரி பரிபூர்ணத்தை பார்த்தால் எனக்கு அடையாளம் தெரியும்.) போலீசார் என்னை விசாரணை செய்தார்கள்.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை:**

1) போலீசார் என்னை எப்போது எங்கு வைத்து எத்தனை மணிக்கு விசாரித்தார்கள் என்றால் 16.03.2019 ஆம் தேதி அன்று இரவு 7.45 மணிக்கு ரெட்டியார்சத்திரம் ஊராட்சி ஒன்றியத்தில் வைத்து விசாரித்தார்கள். போலீசார் விசாரணையில் ஆக்கிரமிப்பு செய்ததாக சொல்லப்படும் நிலத்தின் சர்வே எண்ணை குறிப்பிட்டு நான் சொல்லவில்லை என்றால் சரிதான். எதிரிகள் ஆக்கிரமிப்பு செய்யப்பட்டதாக சொல்லப்படும் நிலத்தை அளக்க செல்வதற்கு முன்பாக சட்ட முறையிலான அறிவிப்பு முன்கூட்டியே எதிரிகளுக்கு வழங்கப்பட்டதா என்றால் வட்டாட்சியர் மூலமாக வழங்கப்பட்டது. அந்த அறிவிப்பின் நகலை நான் பார்த்தேனா என்றால் பார்த்துள்ளேன். அந்த அறிவிப்பின் ந.க.எண்ணை குறிப்பிட்டு போலீசார் விசாரணையின்போது நான் சொல்லவில்லை என்றால் சரிதான்.

2) இந்த வழக்கு முடிவதற்குள்ளாக என்னால் அந்த அறிவிப்பின் நகலை நீதிமன்றத்தின் முன்பு தாக்கல் செய்யமுடியாது என்றால் சரியல்ல, அவகாசம் கொடுத்தால் தாக்கல் செய்கிறேன். இந்த வழக்கின் எதிரி கருப்புச்சாமி திண்டுக்கல் மாண்பமை சார்பு நீதிமன்றத்தின் முன்பாக அ.வ.எண் 463/2019 என்ற வழக்கை தொடுத்து அதில் மூன்றாவது பிரதிவாதியாக சேர்க்கப்பட்டு அந்த வழக்கு முடிவுற்ற விவரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. மேற்படி அசல் வழக்கில் வழக்கறிஞர் நியமித்து நான் மாண்பமை சார்பு நீதிமன்றத்தின் முன்பு ஆஜர் ஆனேன் என்றால் சரியல்ல, அந்த வழக்கின் விவரம் எனக்கு தெரியாது. எதிரிகளுக்கு சாதகமாக மேற்படி வழக்கில் தீர்ப்பானதால் மேற்படி தீர்ப்பானது இந்த வழக்கிற்கு பாதகமாக அமையும் என்பதால் அசல் வழக்கின் விவரங்களை தெரிந்து கொண்டு இந்த வழக்கில் தெரியாது என்று பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

3) மேற்படி எதிரிகள் ஆக்கிரமித்தாக சொல்லப்படும் நிலத்தின் இருந்து எத்தனை தென்னை மரங்கள் அக்கற்றப்பட்டது என்றால் தோராயமாக 50 மரங்கள் அகற்றப்பட்டு இருக்கும். 50 தென்னை மரங்கள் பிடுங்கியது தொடர்பான விவரங்களை போலீசார் விசாரணையில் குறிப்பிட்டு சொல்லியுள்ளேனா என்றால் சொல்லவில்லை. 50 தென்னை மரங்களை அப்புறப்படுத்த யார் உத்தரவு பிறப்பித்தார் என்றால் கோட்டாட்சியர் தான் உத்தரவிட்டார். மேற்படி கோட்டாட்சியரின் உத்தரவை நான் பார்த்தேனா என்றால் நான் பார்த்துள்ளேன். இந்த வழக்கு முடியும் வரை கூட என்னால் மேற்படி கோட்டாட்சியர் உத்தரவை தாக்கல் செய்ய முடியாது என்றால் கோப்புகள் அனைத்தும் வட்டாட்சியர் மற்றும் வட்டாரா வளர்ச்சி அலுவலர் அலுவலகத்தில் உள்ளது. மேற்படி உத்தரவுகள் பிறப்பிக்கப்படவில்லை அதை தெரிந்து கொண்டே பிறப்பிக்கப்பட்டதாக பொய் சாட்சியம் சொல்கிறேன் என்றால் சரியல்ல.

4) இந்த வழககிற்கு பின்னிட்டு 1வது எதிரியால் மாண்பமை முதன்மை சார்பு நீதிமன்றம் திண்டுக்கல்லில் 1வது எதிரி தாக்கல் செய்த உரிமையியல் வழக்கு அசல் வழக்கு எண் 463/2019 நான் ஆக்கிரமிப்புகளை அகற்றியதாக சொல்லப்படும் பகுதியில் எந்த ஓடையும் இல்லை என்றும், மேற்படி நிலமானது 1வது எதிரிக்கு சொந்தமான பட்டா நிலம் என்று தீர்ப்பாகி இருந்தால் இந்த வழக்கு பொய் வழக்கு என்றால் சரியல்ல, நான் கடந்த 15.11.2019 ஆம் தேதி அன்று பணி மாறுதலாகி

சென்றுவிட்டதால் அசல் வழக்கு சம்பந்தமான எந்த விவரமும் எனக்கு தெரியாது. நான் முதல் விசாரணையில் சொல்லியுள்ளதுபோல் எதிரிகள் கையில் அரிவாளை கொண்டு கொலைமிரட்டல்விடவில்லை என்றாலும், தகாத வார்த்தைகளால் பேசவில்லை என்றாலும் சரியல்ல. எதிரிகளுக்கு வேண்டாத ஆட்களின் துண்டுதலால் இந்த பொய் வழக்கை தாக்கல் செய்து அதன் அடிப்படையில் எதிரிகளுக்கு சொந்தமான பட்டா நிலத்தில் இருந்து 50 தென்னை மரங்களை சட்டமுரணாக அகற்றப்பட்டது என்றால் சரியல்ல. மேற்படி சட்ட முரணான அகற்றத்தால் எதிரிகளின் வாழ்க்கை தரம் 10 ஆண்டுகள் பின்நோக்கி சென்றுவிட்டது என்றால் சரியல்ல, எதிர்கால சந்ததியின் நலனுக்காகத்தான் அகற்றப்பட்டது. நான் முதல் விசாரணையில் சொல்லியுள்ளதை போல் வழக்கு சம்பவம் எதுவும் நடைபெறவில்லை என்றால் சரியல்ல. என்னுடன் பணிபுரியும் சக அலுவலர் கொடுத்த பொய் புகாருக்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

Taken Down by me in Open Court and Read Over to the witness in the presence of the accused interpreted to him in Tamil and admitted by him/her to be correct.

Signature of the witness
(சாட்சியின் கையெழுத்து)

PRAVEENA SUBBARAYAN

Digitally signed by PRAVEENA SUBBARAYAN
Date: 2026.07.20 18:19:56 +0530

Judicial Magistrate
Oddanchatram.
Date : 20/07/2026